# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 19/2024 |
| Deposition of Witness | : | PW– 5 |
| Name | : | கார்த்திக்ராஜ் |
| Father Name | : | கதிர்வேல் |
| Village | : | ஈரோடு |
| Taluk | : | ஈரோடு |
| Age | : | 43 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஈரோடு அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 12.08.2021 ஆம் தேதியன்று காங்கேயம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது இரவு சுமார் 7.30 மணிக்கு ராமசாமி வயது 55, த/பெ. பொன்னுச்சாமி, வாலிப்பனங்காடு, வீரசோழபுரம், காங்கேயம் தாலுக்கா என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் கல்லைக்கொண்டு மேற்கண்ட விலாசத்தில் தன்னை தாக்கியதாக சிகிச்சைக்கு வந்தார். அவர் தாக்குதல் நடந்த 12.08.2021 ஆம் தேதியன்று நேரம் மாலை 5.00 மணி என்று கூறினார். அவரை பரிசோதித்தபோது தலைப்பகுதியில் இரண்டு காயங்கள் இருந்தது. அவருக்கு மயக்க நிலை மற்றும் காது, மூக்கு, தொண்டை எதிலும் இரத்தம் வரும் நிலையில் இல்லை. அவருக்கு நான் முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். திருப்பூர் அரசு மருத்துவமனையில் அறுவைசிகிச்சையில் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினார். **அந்த காயச்சான்று/விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி தேதியன்று இரவு 9.45 மணிக்கு பழனியம்மாள் (70), க/பெ. சண்முகம், வாலிப்பனங்காடு, வீரசோழபுரம், காங்கயேம், என்ற முகவரியில் உள்ள நபரும் பேபி வயது 46, க/பெ. ராமசாமி மேற்படி அதே விலாசத்தில் இருக்கும் இருவரும் சிகிச்சைக்காக வந்தனர். அவர்களை பரிசோதித்து விபத்து

பதிவேட்டில் பதிவு செய்தேன். அவர்கள் இருவருக்கும் முதலுதவி சிகிச்சை அளித்து எலும்பு மருத்துவரை சந்தித்துவிட்டு அடுத்த நாள் வந்து காண்பிக்க அறிவுறுத்தினேன். ஆனால் அவர்கள் வரவில்லை. எனவே அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து என்னால் சான்று வழங்க இயலவில்லை. **பழனியம்மாள் என்பவரின் விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.4 மற்றும் பேபி என்பவரின் விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு ராமசாமி என்ற நபர் எப்போது சிகிச்சைக்கு சேர்ந்தார் என்ற குறிப்பு இல்லை என்றால் சரிதான். பேபி, பழனியம்மாள் ஆகிய இருவருக்கும் வெளிப்புற காயங்கள் இல்லை என்றால் சரிதான். அவர்கள் சிகிச்சைக்கு வந்த நேரம் வேறு, ராமசாமி சிகிச்சைக்கு வந்த நேரம் வேறு என்றால் சரிதான். மூவரும் சிகிச்சைக்கு வந்த நேரத்தில் ராமசாமிக்கும் மற்ற இருவருக்கும் சுமார் இரண்டு மணிநேரம் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். என்னை 04.09.2021 ஆம் தேதி போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ராமசாமியை யார் தாக்கினார்கள் என்று பெயர் குறிப்பிட்டு என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் வாங்கப்பட்ட வாக்குமூலத்தில் மூன்று நபர்களும் மேல் சிகிச்சைக்கு செல்லாமல் தன்னிச்சையாக சென்றுள்ளார் என்று போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 06.09.2021 ஆம் தேதி பெறப்பட்ட 161(3) வாக்குமூலம் என்னுடையது இல்லை என்றால் சரிதான். ஒரு நபர் தவறி நிலை தடுமாறி கீழே விழுந்தால் கூட 1 ஆம் நபருக்கு இதுபோன்று காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.13 17:01:54 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்